



# நகர் ஊரமைப்பு துறை(DTCP)
## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
### திருப்பூர் ஊராட்சி ஒன்றியம்

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், வள்ளிபுரம் ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண் : 345/5 –ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:500 (திட்டமில்லாத பகுதி)

இணையதள விண்ணப்பம் எண் : 9K743XKD & நாள் : 09.05.2023

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.89 ஏக்கர் (அ) 3600.00 சதுர மீட்டர்

ஒதுக்கிய மனைகள் : 16

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை /அணுகு சாலை

பொதுஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :

I. மனைப்பிரிவு சாலை மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : 1597.03 சதுர மீ

II. பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு )
: (3600.00 – 1597.03) x (10/100) = 200.29 சதுர மீ

ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு (அ) பூங்கா பரப்பிற்கு ஈடான வழிகாட்டி மதிப்பு தொகை = 200.29 ச.மீ (பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

III. பொது உபயோகம் :

A) LOCAL BODY- க்கு ஒதுக்கப்பட வேண்டிய பொது உபயோகம் பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)
: (3600.00 – 1597.03) x (0.5/100) = 10.01 சதுர மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 13.93 சதுர மீ (0.69 %)

B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பொது உபயோகம் பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)
: (3600.00 – 1597.03) x (0.5/100) = 10.01 சதுர மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 14.62 சதுர மீ (0.73 %)

கட்டிட வரம்பு : 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ –ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 3.0மீ –ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ –ம் விடப்படல் வேண்டும்.

12.0மீக்கு மேல் 30.5மீ வரையிலான அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீ X 4.5மீ–ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை ( MA-1 ) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020– ன் படி மனைப்பிரிவு சாலைகள் ( மூலை முடக்குகள் உட்பட) மற்றும் (A) LOCAL BODY –ற்கு பொது உபயோகம் ஒதுக்கீடு ஆகியன உள்ளாட்சியும் மற்றும் (B) TANGEDCO –ற்கு பொது உபயோகம் ஒதுக்கீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சியும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020 மற்றும் அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022–ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியனவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், வள்ளிபுரம் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 0.6மீ X 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து ஊராட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் குறைந்த அழுத்த மின்கம்பிபாதையினை மனுதாரர் தனது சொந்த செலவில் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**SWP/DTCP/TIRUPPUR/LAYOUT APPROVAL No : 171 /2023**

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2023.06.21 18:37:08

ராகேஷ் ரவி
அளவர்/உதவி வரைவாளர்

ரா.செபஸ்தி ரோசாலி
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.